# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8066987

11/AC/2019

1. District : மாவட்டம் சேலம் | PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு | Year: ஆண்டு 2019 | FIR No.: மு.த.அ. எண் 11/AC/2019 | Date: நாள் 31.05.2019

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption (Amendment Act) 2018. | Sections பிரிவுகள்: U/S. 7(a)
(ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்: —
(iii) Act சட்டம்: — | Sections பிரிவுகள்: —
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை 1). 17.05.2019 பகல் சுமார் 12.00 மணி 2) 27.05.2019 காலை சுமார் 10.00 மணி

Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை 3) 28.05.2019 காலை சுமார் 10.00 மணி.

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 31.05.2019 | Time நேரம் : 06.00 hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 31.05.2019 | Time நேரம் : 06.00 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட புகார்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 80 கி.மீ தென் கிழக்கு.

Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி நாகியம்பட்டி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், கெங்கவல்லி வட்டம்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. P. ராஜா | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் (லேட்) திரு. பெருமாள்.

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 29/2019 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —

Date of Issue : வழங்கப்பட்ட நாள் — | Place of Issue : வழங்கப்பட்ட இடம் —

(f) Occupation : தொழில் பெயிண்ட் வியாபாரம் | (g) Address : முகவரி க.எண் 2/55 ஆதிதிராவிடர் தெரு நாகியம்பட்டி (PO), கெங்கவல்லி (Tk) சேலம் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1). திருமதி. பிரித்தா, கிராம நிர்வாக அலுவலர், நாகியம்பட்டி கிராமம், கெங்கவல்லி வட்டம்.
2) திரு. பழனி, கிராம உதவியாளர், நாகியம்பட்டி கிராமம், கெங்கவல்லி வட்டம், சேலம் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

தனித் தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

P. ராஜா 31/05/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

P. [signature] 31/05/2019
Signature of the Officer in charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
31.05.2019.

Name: பெயர் P. தங்கமணி.
Rank: நிலை காவல் ஆய்வாளர்,
ஊரக நிலைய மகளிர் காவல்நிலையம் சேலம்.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

<u>சமர்ப்பிக்கப்படுகிறது</u>

31.05.2019ம் தேதி காலை 06.00 மணிக்கு P.ராஜா, த/பெ. (லேட்) பெருமாள், 2/55, ஆதிதிராவிடர் தெரு, நாகியம்பட்டி (Po), கெங்கவல்லி (Tk), சேலம் (Dt) என்பவர் சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு

அனுப்புதல், P.ராஜா, த/பெ. (லேட்) பெருமாள், 2/55, ஆதிதிராவிடர் தெரு, நாகியம்பட்டி (Po), கெங்கவல்லி (Tk), சேலம் (Dt), பெறுதல், காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்புப்பிரிவு, சேலம். அய்யா, நான் சேலம் மாவட்டம், கெங்கவல்லி வட்டம், நாகியம்பட்டி கிராமம், ஆதிதிராவிடர் தெருவில் என் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் B.A வரை படித்துள்ளேன். நாகியம்பட்டி, அரசமரம் பஸ் நிறுத்தம் அருகில் பொன்னியம்மாள் ஹார்டுவேர்ஸ் & பெயிண்டிங் என்ற பெயரில் பெயிண்ட் கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். நான் கடந்த 22.09.2017ஆம் தேதி கெங்கவல்லி வட்டம், நாகியம்பட்டியை சேர்ந்த அய்யமுத்து மனைவி திருமதி. பாங்கி என்பவரிடம் இருந்து நாகியம்பட்டி கிராம நத்தம் சர்வே எண்.485/18ல் 1336 ½ சதுர அடி வீட்டுமனை நிலத்தில் 216 சதுர அடியில் கட்டப்பட்டுள்ள மங்களூர் ஓடுபோட்ட வீட்டுடன் ரூ.1,90,000/–க்கு எனது பெயரில் விலைக்கு வாங்கி அதை தம்மம்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.1384/2017 ஆக கிரயம் செய்திருந்தேன். அந்த வீட்டுமனை நிலம் எனது பெயருக்கு பட்டா மாறுதல் செய்யப்படாமல் இருந்து வந்தது. இந்நிலையில் எனது கடையின் வியாபார அபிவிருத்திக்காக வங்கி லோன் வாங்க விரும்பி நான் ஆத்தூரில் உள்ள City Union Bank ல் விண்ணப்பித்தேன். அப்பொழுது வங்கியில் லோன் வழங்க எனது பெயரில் தனிப்பட்டா தேவைப்படுவதாக அங்குள்ள அலுவலர்கள் தெரிவித்ததால் நான் கடந்த 17.05.2019 அன்று பகல் சுமார் 12.00 மணியளவில் நாகியம்பட்டி VAO அலுவலகத்திற்கு சென்று VAO திருமதி. பிருந்தா அவர்களை சந்தித்து பட்டா மாற்றம் செய்வது குறித்து விபரம் கேட்டேன். அதற்கு அவர் என்னிடம் இருந்து வீட்டுமனை பத்திர நகல், மனை வரை தோராய பட்டா நகல் மற்றும் வீட்டு வரி ரசீது நகல் ஆகியவற்றை வாங்கி பார்த்துவிட்டு என்னிடம் தனிப்பட்டா வழங்க ஒரு சர்வே நெம்பருக்கு ரூ.10,000/– செலவாகும் என்றும்

அந்த தொகையை கொடுத்தால்தான் பட்டா வழங்க ஏற்பாடு செய்ய முடியும் என்றும் சொன்னார். அப்போது கிராம உதவியாளர் திரு.பழனியும் உடனிருந்தார். அதற்கு நான் அவரிடம் நான் தற்போது மிகுந்த பணக்கஷ்டத்தில் இருப்பதாகவும், அதற்காக லோன் வாங்கத்தான் தனிப்பட்டா கேட்கிறேன் என்றும், அவ்வளவு தொகை தர தற்போது முடியாத சூழ்நிலையில் இருக்கிறேன் என்றும் அவரிடம் சொன்னேன். அதற்கு அவர் சும்மாவெல்லாம் ஏற்பாடு செய்யமுடியாது முதலில் முன்பணமாக ரூ.3,000/– மட்டும் கொடுக்கும்படியும் அந்த தொகையை வைத்து தான் பட்டாவிற்கு ஏற்பாடு செய்வதாகவும், பின்பு பட்டா உத்தரவு வந்தபின்பு மீதி பணம் ரூ.7,000/– த்தை கொடுத்துவிட்டு வாங்கிக்கொள்ளும்படியும் கண்டிப்பாக தெரிவித்து முதலில் தனிப்பட்டா வேண்டி ஒரு மனு எழுதி அவற்றுடன் எனது வீட்டுமனை பத்திர நகல், மனை வரை தோராய பட்டா நகல் மற்றும் வீட்டு வரி ரசீது நகல் ஆகியவற்றை இணைத்து அட்வான்ஸ் தொகை ரூ.3,000/– த்துடன் கொண்டுவந்து தன்னிடம் கொடுக்கும்படி சொன்னார். நான் என்ன செய்வதென்று தெரியாமல் வீட்டிற்கு சென்று விட்டேன். VAO அவர்கள் கேட்ட அளவுக்கு என்னால் தொகையை தர முடியாது என்பதால் நான் தாசில்தாரிடம் விண்ணப்பம் கொடுத்து தனிப்பட்டாவை வாங்கிக் கொள்ளலாம் என்று எண்ணி கெங்கவல்லி தாசில்தாருக்கு முகவரியிட்டு ஒரு விண்ணப்பத்தினை எழுதி அந்த விண்ணப்பத்துடன் எனது வீட்டுமனை பத்திர நகல், மனை வரை தோராய பட்டா நகல் மற்றும் வீட்டு வரி ரசீது நகல் ஆகியவற்றை இணைத்து 21.05.2019 அன்று காலை சுமார் 11.00 மணியளவில் கெங்கவல்லி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்று அங்கிருந்த ஒரு அலுவலரிடம் எனது விண்ணப்பத்தையும் அத்துடன் வீட்டுமனை பத்திர நகல், மனை வரை தோராய பட்டா நகல் மற்றும் வீட்டு வரி ரசீது நகல் ஆகியவற்றை இணைத்து கொடுத்தேன். அவர் என்னிடம் இருந்து விண்ணப்பத்தை பெற்றுக்கொண்டு அதிகாரிகள் எல்லாம் தேர்தல் வாக்கு எண்ணிக்கை பணிக்கு சென்றுவிட்டதாகவும் அதனால் வாக்கு எண்ணிக்கை முடிந்தபிறகு நாகியம்பட்டி VAO அலுவலகத்திற்கு சென்று VAOவை சந்திக்கும்படியும், எனது விண்ணப்பத்தை நாகியம்பட்டி VAO அலுவலகத்திற்கு அனுப்பிவைப்பதாகவும் சொன்னார். அதன் பிறகு நான் 27.05.2019ம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் நாகியம்பட்டி VAO அலுவலகத்திற்கு சென்று VAO திருமதி. பிருந்தா அவர்களை சந்தித்து

எனது பெயரில் பட்டா மாறுதல் வேண்டி கெங்கவல்லி வட்டாட்சியர் அலுவலகத்தில் 21.05.2019ம் தேதி விண்ணப்பம் கொடுத்த விபரத்தை சொன்னேன். அப்போது கிராம உதவியாளர் திரு.பழனியும் உடனிருந்தார். அதற்கு VAO என்னிடம் விண்ணப்பம் கொடுக்காமல் நேரடியாக வட்டாட்சியர் அலுவலகத்தில் விண்ணப்பம் கொடுத்தால் மட்டும் தனிப்பட்டா வாங்கிவிட முடியாது நீ எங்க விண்ணப்பம் கொடுத்தாலும் பணம் இருந்தால்தான் வேலையாகும் என்றும் தாங்கள் மறுநாள் கெங்கவல்லி தாலுக்கா ஆபீசுக்கு போவதாகவும், எனவே காலையிலேயே வந்து அட்வான்சாக கேட்ட தொகை ரூ.3,000/–த்தை கொடுத்துவிடும்படியும், அப்போதுதான் தாங்கள் தாலுக்காக ஆபீசிலிருந்து எனது விண்ணப்பத்தை வாங்கி வந்து தனிப்பட்டாவுக்கு ஏற்பாடு செய்ய முடியும் என்றும் மறுநாள் காலையில் 10.00 மணிக்கு அலுவலகம் வரும்படியும் கண்டிப்பாக சொன்னார். நான் எதுவும் பேசாமல் வந்துவிட்டேன். அதன் பிறகு 28.05.2019ம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் VAO அலுவலகத்திற்கு சென்றேன். ஆனால் VAO திருமதி. பிருந்தா அலுவலகத்தில் இல்லை. அங்கிருந்த கிராம உதவியாளர் திரு. பழனி என்னிடம் VAO திருமதி. பிருந்தா அவர்கள் நான் அலுவலகம் வந்தால் அட்வான்ஸ் தொகை ரூ.3,000/–த்தை வாங்கி வைக்கும்படி சொன்னதாகவும் அந்த பணத்தை கொடுக்கும்படியும் கேட்டார். நான் நீங்கள் அட்வான்சாக கேட்ட தொகை ரூ.3,000/– த்தை என்னால் ரெடி செய்ய முடியவில்லை என்றும் அந்த விபரத்தை சொல்லிவிட்டு போகலாம் என்றுதான் வந்தேன் என்றும் சொன்னேன். அதற்கு அவர் தற்போது உன்னிடம் எவ்வளவு பணம்தான் உள்ளது என்று கேட்டார். நான் தற்போது ஒரு அவசர செலவுக்கென்று ரூ.1,000/– மட்டும் வைத்துள்ளதாக சொன்னேன். அதற்கு அவர் வெறுங்கையில் முழம் போட முடியாது நீ இந்த தொகையையாவது கொடு அப்போதுதான் உனது விண்ணப்பத்தை வாங்கிக்கொண்டே வரமுடியும் என்று சொல்லி அந்தப் பணத்தை என்னிடமிருந்து வற்புறுத்தி வாங்கிக்கொண்டு, நீ வரும் வெள்ளிக்கிழமைக்குள் மீதி அட்வான்ஸ் தொகை ரூ.2,000/–த்தை ரெடி செய்து கொடுத்திடு, நாங்கள் உனக்கு தனிப்பட்டாவுக்கு ஏற்பாடு செய்கிறோம், பின்பு மீதிப்பணம் ரூ.7,000/–த்தையும் தனிப்பட்டா உத்தரவு வழங்கும்போது கொடுக்கும்படியும் சொல்லிவிட்டு அவர் தானும் தாலுக்கா அலுவலகம் செல்வதாக சொல்லி என்னை அனுப்பி விட்டார். எனக்கு நாகியம்பட்டி VAO திருமதி. பிருந்தா மற்றும்

கிராம உதவியாளர் திரு. பழனி ஆகிய இருவருக்கும் மீதி அட்வான்சு தொகை ரூ.2,000/– மற்றும் மீதிப்பணம் ரூ.7,000/–த்தை கொடுத்து பட்டாமாறுதல் உத்தரவு பெற விருப்பம் இல்லை. எனவே அவர்கள் இருவர் மீதும் உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, Sd xxxxxx 25.01.2018. (P.Raja).

Sir, Received the above computer typed complaint on 31.05.2019 at 06.00 hrs. The genuineness of the complaint was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused were also verified through sources and found to be bad. Hence, I registered a case in Salem V&AC Cr.No.11/AC/2019, u/s 7 (a) of the Prevention of Corruption (Amendment) Act 2018 on 31.05.2019 at 07.00 hrs and took up for investigation. Sdxxxx 31.05.2019 (P.THANGAMANI), INSPECTOR OF POLICE, V&AC, SALEM.

Original FIR along with original computer typed complaint of Tr.P.Raja, S/o.Perumal, 2/55, Adidravidar Street, Nagiyampatty Post, Gangavalli Taluk, Salem District is submitted to the Hon'ble Special Judge for trial of cases under Prevention of Corruption Act, Salem and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

(P.THANGAMANI),
INSPECTOR OF POLICE,
V&AC, SALEM.